பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்

BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

An international open access, peer- reviewed, refereed journal

# நாலடியாரில் வாழ்வின் அறநெறிகள்

# Moral principles of life in Naladiyar

**நெறியாளர் : முனைவர். க. மலர்விழி**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஒட்டன் சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.

**ஆய்வாளர் : பொ.கௌசல்யா**

தமிழ் இலக்கியம்- முதுகலை 2ஆம் ஆண்டு, சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஒட்டன் சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.

**Guide Name: Dr. K. Malarvizhi**

Assistant Professor in Tamil, Sakthi College of Atrs and Science For Women, Oddanchathram. Cell No-9047925710

Student Name: **P.Gowsalya**

Second Year, M.A. Tamil Literature, Sakthi College of Atrs and Science For Women, Oddanchathram, Dindigul District.

**Abstract**

In the Tamil literary tradition, ethical literature stands as a distinguished genre that expounds the moral principles of human life. The eighteen didactic works that emerged after the Sangam period were composed with the aim of guiding people in their daily lives with moral principles. Among them, Naladiyar is a remarkable work that succinctly conveys the impermanence of human life, the necessity of virtue, good conduct, patience, generosity, and the qualities of noble individuals in short four-line verses.

**Keywords:** The story of the birth of Naladiyar, education, birth in a village, noble people, the infallibility of Periyar, pride, good lineage, and discipline.

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் அறநெறிகளை வலியுறுத்தும் முக்கிய நூல்களில் ஒன்றாக நாலடியார் விளங்குகிறது. இது **பதினெண் கீழ்க்கணக்கு** நூல்களில் இடம்பெறும் ஓர் அறநூல். 400 பாடல்களைக் கொண்ட இந்நூல் ஒவ்வொரு பாடலிலும் நான்கு அடிகள் அமைந்திருப்பதால் 'நாலடியார்' எனப் பெயர்பெற்றது. வாழ்க்கையின் நிலையாமை, அறத்தின் அவசியம், ஒழுக்கம், துறவு, பகுத்தறிவு ஆகியவை இந்நூலின் மையக் கருத்துகளாகும்.

**திறவுச் சொற்கள்**

நாலடியார் பிறந்த கதை, கல்வி, குடிப்பிறப்பு, மேன்மக்கள், பெரியாரைப் பிழையாமை, பெருமை, நல்லினஞ் சேர்தல், தாளாண்மை ஆகியவை ஆகும்.

**முன்னுரை**

தமிழ் இலக்கிய மரபில் **அற இலக்கியங்கள்** மனித வாழ்வின் ஒழுக்க நெறிகளை எடுத்துரைக்கும் உயர்ந்த இலக்கியப் பிரிவாகத் திகழ்கின்றன. சங்க காலத்திற்குப் பின் தோன்றிய **பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்** மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு அறநெறிகளை வழிகாட்டும் நோக்குடன் இயற்றப்பட்டன. அவற்றுள் **நாலடியார்** மனித வாழ்க்கையின் நிலைத் தன்மையற்ற தன்மை, அறத்தின் அவசியம், நல்லொழுக்கம், பொறுமை, ஈகை, சான்றோர் பண்பு போன்றவற்றைச் சுருக்கமான நான்கு அடிச் செய்யுள்களில் எடுத்துரைக்கும் சிறப்புடைய நூலாக விளங்குகிறது.

நாலடியார் சமண முனிவர்களால் இயற்றப்பட்டதாகக் கருதப்படுகின்றது. உலகியல் வாழ்க்கையில் மனிதன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், எதைச் செய்ய வேண்டும், எதைத் தவிர்க்க வேண்டும் என்பதைக் குறுகிய, தெளிவான, ஆழமான கருத்துக்களுடன் எடுத்துரைப்பதே இதன் தனித்தன்மையாகும். இக்கட்டுரையில் **நாலடியாரில் காணப்படும் வாழ்வின் அறநெறிகள்** ஆய்வு முறையில் ஆராயப்படுகின்றன.

*"அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது*
*பொன்றுங்கால் பொன்றாத் துணை" (குறள்-36)*

நாலடியாரில் அறம்பொருந்திய நல்ல வழிகளும் வாழ்க்கைக்குத் தேவையான கல்வி. சான்றோரின் செயல்கள், பெருமைகள் மற்றும் அன்பின் உறவுகளும் இவற்றில் காண்போம்.

**நூலின் வரலாறு**

*“நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்*
*பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்*
*இன்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே*
*கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு” (பழைய வெண்பா)*

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் முதல் நூலாகவும், சிறந்த நீதி நூலாகவும் நாலடியார் விளங்குகிறது. இது நானூறு வெண்பாக்களால் அமைந்துள்ளது.

*“வெள்ளாண் மரபுக்கு வேதமெனச் சான்றோர்க*
*ளெல்லாரும் கூடி எடுத்துரைத்த சொல்லாய்ந்த*
*நாலடி நானூறு நன்கினிதா வென்மனத்தே*
*சீலமுடன் நிற்க தெளிந்து”*

நாலடி நானூறு என்ற பெயரும் வேளாண்வேதம் எனவும் குறிக்கப்படுகிறது.

**நாலடியார் பற்றிய பொன்மொழிகள்**

திருக்குறளையும் நாலடியாரையும் இணைத்து "நாலிரண்டு" என வழங்கும் வழக்கம் ஆய்வாளர் அறிந்ததேயாகும்.

*“ஆலம் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி”*

*“பழகுதமிழ் சொல்லருமை நாலிரண்டில்”*

*“நாலடி இரண்டடி கற்றவனிடத்து*
*வாயடி கையடி அடிக்காதே”*

“ஆல்”என்பது ஆலம் விழுதைக் குறிக்கும் "வேல்" என்பது கருவேலங்குச்சியையும் வேம்பையும் குறிக்கும். ஆலம் விழுதையும் கருவேலங்குச்சியையும் வைத்துப் பல்தேய்த்தால் பல்லுக்கு உறுதி என்பது பொருள். அதே போன்று "நால்" என்பது நான்கு அடிகளையுடையது "நாலடியார்" என்ற நூலையும் 'இரண்டு' என்பது இரண்டு அடிகளையுடைய 'திருக்குறள்' என்ற நூலையும் குறிக்கின்றன."

**நாலடியார் பிறந்த கதை**

*“எண்பெருங் குன்றத்து எணாஅயிரம் இருடி*
*பண்பொருந்தப் பாடியபா நானூறும் ” (தனிப்பாடல்)*

நாலடியார் பற்றிய கருத்துகள் ஆகாயத்தாமரையாய்க் கற்பனைக் கதையாய் உள்ளது. சமண முனிவர்கள் 8000 பேர் தமிழகத்திற்கு வந்ததாகவும் 8000 பாடல்கள் எழுதி வைகை ஆற்றில் விட்டதில் 400 பாடல்களே நீரை எதிர்த்து வந்ததாகவும் ஒரு தனிப்பாடல் கூறுகிறது.

**கல்வி**

கல்வியை ஒரு பெண்ணாகவும் செல்வத்தை மற்றொரு பெண்ணாகவும் வர்ணித்த நாலடியார் தம் மரபுக்கேற்பக் கூறுகிறது. கல்வியின் சிறப்பை நாலடியார் நன்கு போற்றுகிறது. கல்வி கற்பதன் அவசியத்தை வலியுறுத்துவதற்காகக் கற்காதவனைப்பற்றி இழித்துரைக்கும் செய்யுட்கள் எல்லாம் மிகச் சிறந்தவைகள்.

*“களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்*
*விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்.*
*கடைநிலத்தோர் ஆயினும் கற்றுஅறிந் தோரைத்*
*தலைநிலத்து வைக்கப் படும்” (நாலடியார் - 198)*

மனிதன் பிறப்பு அரிதானது இவற்றில் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவர் கற்றவராயிருப்பின் உயர்ந்தவரும் போற்றுவர். உவர் நிலத்தில் தோன்றிய உப்பு நல்ல விளை நிலத்திற்குப் பயன்படுதல் போல் கற்றறிந்த தாழ்ந்த குடியினர் உயர்ந்தவருக்குப் பயன்படுவர். கல்வியானது ஆண் பெண் என வேறுபாடுகள் இல்லாமல் அனைவருக்கும் சமம் என்ற பொதுவான கருத்துடையது.

*“இம்மை பயக்குமால் ஈயக்குறைவின்றால்*
*தம்மை விளக்குமால் தாமுளராகக் கேடுஇன்றால்*
*(நாலடியார் - 197)*

ஒவ்வொரு மனிதனுக்குள் இருக்கும் அறியாமை யென்னும் இருளை நீக்கி நன்னெறியில் செலுத்தும் கல்வி இம்மையிலும் இன்பம் பயக்கும். கொடுக்கக் கொடுக்கக் குறையாததும் வற்றாத நீரூற்றாகவும் தம்மைக் கற்றவனை அனைவரும் போற்றும் படியாகவும் அமைந்துள்ளது.எண்ணிறந்த நூல்கள் உலகில் இருந்தாலும் வாழ்க்கைக்குப் பயன்படக் கூடிய நல்ல நூற்கள் மட்டுமே விரும்பிக் கற்க வேண்டும். நீரொழியப் பாலருந்தும் அன்னமாக இருக்க வேண்டும் என்பதை மற்றொரு பாடல் இயம்புகிறது.

**குடிப்பிறப்பு**

*“உடுக்கை உலறி உடம்பழிந்தக் கண்ணும்*
*குடிப்பிறப் பாளர்தங் கொள்கையிற் குன்றார்*
*இடுக்கண் தலைவந்தக் கண்ணும் அரிமா*
*கொடிப்புற் கறிக்குமோ? மற்று!" (நாலடியார் - 196)*

புலி பசித்தாலும் புல்லைத்தின்னாது என்பது பழமொழி. நற்குடிப்பிறந்தார் வறுமையுற்ற காலத்திலும் அதனைப் பிறரிடம் சென்று கூறுவதில்லை. அவ்வறுமையிலும் பிறருக்கு உதவுபவராகவும் தம்மைவிட பெரியோர் வந்தவுடன் எழுந்திருத்தலும், அவர்களை வரவேற்றலும் பின்பு உடன் செல்லுதலும் நற்குடிப் பிறந்தார்க்கு இயல்பாகும்.

*“எற்றொன்று மில்லா விடத்துங் குடிப்பிறந்தார்*
*அற்றுத்தற் சேர்ந்தார்க் கசைவிடத் தூற்றாவர்” (நாலடியார் - 195)*

நல்ல குடிப்பிறந்தார் மனதில் பொல்லாங்கு இல்லாமல் ஊன்றுகோல் போல உதவுவர். நிற்க நிழலும் உண்ணப் பழமும் தரும் மரம்போல வழங்குவதே அவர் தம்முடைய கடமையாகக் கொள்வார்.

ஆண்கள் பொற்றோரைப் பாதுகாப்பதுடன் சுற்றத்தாரையும் பாதுகாக்க வேண்டும். மாண்ட குணத்தோடு மக்கட்பேறு இல்லெனினும் ஆடவன் இல்லாளை விட்டு நீங்கான் என்று நாலடியார் கூறுகிறது.

**மேன்மக்கள்**

*“கடித்துக் கரும்பினைக் கண்தகர நாறி*
*இடித்துநீர் கொள்ளினும் இன்சுவைத்தே யாகும்*
*வடுப்பட வைதிறந்தக் கண்ணும் குடிப்பிறந்தார்*
*கூறார்தம் வாயிற் சிதைந்து” (நாலடியார் - 194)*

அதியமானால் அறிமுகம் படுத்தப்பட்ட கரும்பானது கடித்தோ (அ) நறுக்கியோ எப்படி உண்டாலும் இனிப்பாகவே இருக்கும் அது போல் சான்றோரும் தமக்கு வறுமை காரணமாக உடலானது எலும்பும் தோலுமாக மாறிய காலத்திலும் பிறருக்குச் செய்யம் பண்பிலிருந்து மாறவே மாட்டார்கள்.

*“பன்னாளுங் சென்றக்கால் பண்பிலார் தம்முழை*
*என்னாலும் வேண்டுப சென்றிகழ்வர்.”*
*(நாலடியார் - 159)*

மற்றவர் இரகசியத்தைக் கேட்பதில் செவிடனாய், தவறானவற்றைப் பார்க்கும் போது குருடனாய், புறய்கூறும் நிலைவரின் தீய எண்ணம் மனதில் ஏற்படாமல் அதைக் கட்டுப்படுத்தி ஊமையாய் வாழும் ஒருவனுக்கு நீதி சொல்ல வேண்டியதில்லை என்கிறது நாலடியார்.கள் குடித்தல், திருடுதல், பிறரை நிந்தித்தல், பொய்பேசுதல், தளர்ந்தவிடத்து வருந்துதல் ஆகிய தீயப்பண்புகள் சான்றோரிடம் எந்நேரமும் தோன்றா என்கிறது மற்றொரு நாலடியார் பாடல்.

**பெரியாரைப் பிழையாமை**

*“பொன்னே கொடுத்தும் புணர்தற் கரியாரைக்*
*கொன்னே தலைக்கூட்டப் பெற்றிருந்தும் அன்னோ*
*பயனில் பொழுதாக் கழிப்பரே நல்ல நயமில் அறிவினவர்.”*
*(நாலடியார் - 193)*

இம்மாயலோக உலகமானது பணத்தாலும், பொன்னாலும் சந்தோசப்படுகிறது. அப்பொன்னைக் காட்டிலும் சிறந்தவர்கள் பெரியோர்கள். இவர்களின் விலைமதிப்பில்லாப் பணிதலும், அடக்கமும், உதவிபுரிதல் இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளாமல் ஒவ்வொரு நாளும் வீணாகக் கழிக்கின்றனர் அறிவிலார் என்று இக்காலப் பண்பிணை அக்காலமே கூறிச்சென்றன அறநெறிகள்.

**நல்லினஞ்சேர்தல்**

*“அறியாப் பருவத் தடங்காரோ டொன்றி*
*நெறியல்ல செய்தொழுகி யவ்வும் நெறியறிந்து*
*நற்சார்பு சாரக் கெடுமே வெயின்முறுகப்*
*புற் பனிப் பற்றுவிட் டாங்கு” (நாலடியார் - 171)*

பூவோடு சேர்ந்த நார்களும் மணக்கும் என்பன போல ஒரு காலத்தில் அறியாமையினால் செய்கின்ற கொலை, களவு, காமம், பொய், வஞ்சகம் ஆகியவை நல்லவர்களோடு சேரும் போது புல்மீது இருக்கும் பணியானது வெயில் ஏறும் போது மறைந்து விடுவது போல தீயவர்களின் பாவமும் மறைந்து விடும்.

*“பாலோ டளாயநீர் பாலாயின் அல்லது*
*ராய் நிறந்தெரிந்து தோன்றாதாந் தேரிந்*
*(நாலடியார் - 177)*

பாலோடு சேர்ந்த தண்ணீரும் பாலைப் போலவே நிறத்தைக் கொடுக்கும் அவற்றைப் போலவே நல்லவருடன் சேர்ந்த சிறியோரும் நல்லவராகவே பிறரால் மதிக்கப்படுவர் என்ற உண்மையான கருத்தை நாலடியார் வெளிப்படுத்தியுள்ளது.

**பெருமை**

*“உறைப்பகுங் காலத்தும் ஆற்றுநீர்க் கேணி*
*இறைத்துணினும் ஊராற்றும் என்பர் கொடைக்கடனுஞ்.*
*சா அயக் கண்ணும் பெரியார்போல் மற்றையாற்*
*ஆ அயக் கண்ணும் அரிது" (நாலடியார் - 184)*

“மாரியல்லது காரியம் இல்லை என்பவர் திருவள்ளுவர். இந்த உலகத்தில் மழையானது தன்னுடைய கொடை பண்பிலிருந்து காலம்மாறி மழைப்பொழியா விட்டாலும் கற்பாறையிலிருந்து ஊற்றானது சுரந்து தம்மைச்சுற்றியுள்ள ஊர்மக்களைக் காப்பாற்றும் அதுபோல தான் பெரியவர்கள் தன்னுடைய வாழ்க்கையில் தரித்திரம் நேரிட்டாலும் தம்முடைய கொடையிலிருந்து மாறவே மாட்டார் என்ற கருத்தை எடுத்தியம்புகிறது.

*“நகையேயும் வேண்டாத நல்லறிவு னார்கண்*
*பகையேயும் பாடு பெறும்.”(நாலடியார் - 187)*

நந்தா விளக்கு போன்று அணையா சிறுமைக் குணமுடையபண்பில்லாதவரிடம் நட்பு கொள்ளுதல் என்றும் துன்பமேயாகும். சில நேரத்தில் மகிழ்ச்சியின் கண்ணும் தளர்ந்த செய்திகளை வேண்டாத நல்லறிவாளருடைய பகையும் பெருமையைத் தரும் என்கிறது.இந்த உலகத்தில் இவ்வாழ்க்கையானது துன்பமானது. இளமையானது மாறும் போது எல்லாரும் நம்மை வெறுக்கக் கூடும். எனவே, எதுவும் நிலையானது இல்லை எல்லாம் உப்புக்குழிப் போன்றது. எனவே ஆசையை விட்டுத் துறவில் மனம் செல்ல வேண்டும் என நாலடியார் பாடல் கூறுகிறது.

**தாளாண்மை**

*“உறுபுலி ஊனிரை இன்றி ஒருநாள்*
*சிறுதேரை பற்றியுற் தின்னும்அறிவினாற்*
*காற்றொழி லென்று கருதற்க கையினால்*
*மேற்றொழிலு மாங்கே மிகும்”*
*(நாலடியார் - 193)*

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் மேடு பள்ளங்கள் இருந்தாலும் தோல்வியைக் கண்டு துவண்டுவிடாமல் “முயற்சி திருவினையாக்கும்”என முயன்றால் முடியாதது எதுவுமில்லை என்ற வாக்கை மனதில் வைத்துச் செயல்பட்டால் எந்த வேலையாகவும் படிப்பாகவும் இருந்தாலும் அவற்றில் வெற்றி நிச்சயம். முயற்சி செய்யாமல் நம்பிக்கையோடு செயல் படாமல் இருந்தால் காலமும் நேரமும் வீணாகும்.ஊன் இல்லாததால் உறுபுலி பசியில் வாடி ஒரு நாள் சிறிய தேரையை உண்டு உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும். சிலந்தி வளையைப் பின்னும் போது எத்தனை முறை விழுந்தாலும் விடாமுயற்சியுடன் செயல்பட்டு அவற்றை மீண்டும் பின்னி முழுமையாக முடிக்கிறது. மனிதர்களும் அவ்வாறே செயல்பட்டால் வாழ்க்கையில் வெற்றி நிச்சயம்.

*“சிதலை தினப்பட்ட ஆல மரத்தை*

*மதலையாய் மற்றதன் வீழுன்றி யாங்குக்”*

*(நாலடியார் - 197)*

ஆலமரத்தின் வேரானது செல்லால் தின்னப்பட்டு வீழ்கின்ற நிலையிலும் அந்த விழுதானது அவற்றைத் தாங்கிக் கொள்ளும். இவற்றை போலவே தந்தை வயதானாலும் உடல் நிலையாலும் தம்முடைய நிலைமை மாறினாலும் அவ்வீட்டில் இருக்கும் மகன் கல்வியாலும் விடா முயற்சியாலும் அக்குடும்பத்திற்கு எவ்வித துன்பம் வராமல் காப்பாற்றி வரவேண்டும் என்ற உவமையே அழகாக எடுத்துரைகிறது நாலடியார்.

**முடிவுரை**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் நாலடியார் அன்றும், இன்றும், என்றும் தம்மக்களின் வாழ்க்கையில் ஒன்றி உறவாடி நம்மை வழி நடத்துகிறது, அவற்றின் படி அறநெறியில் நடப்போம். செம்மையாக வாழ்ந்து வாழ்வில் வெற்றி பெறுவோம்.நாலடியார் மனித வாழ்க்கையின் அனைத்துத் தளங்களையும் தொட்டுச் செல்லும் உயரிய அறநூலாகும். திவாழ்க்கையின் . நிலையாமையை உணர்த்அறத்தின் வழியில் வாழுமாறு மனிதனைவழிநடத்துகிறது.நாலடியார் வலியுறுத்தும் அறநெறிகள் காலத்தால் அழியாதவை. அறம் என்பது நூல்களில் மட்டுமல்ல, நடைமுறை வாழ்க்கையிலும் பின்பற்றப்பட வேண்டும் என்பதே நாலடியாரின் அடிப்படை நோக்கமாகும்.

**துணை புரிந்த நூல்கள்**


1. சுப்பிரமணியன். கா.,பதினெண் கீழ்க்கணக்கு ஆய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதல் பதிப்பு1985.
2. புலியூர் கேசிகன்(உரை), நாலடியார் மூலமும் உரையும், சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை, முதற் பதிப்பு1962.
3. வரதராசனார். டாக்டர் மு., தமிழ் அற இலக்கியங்கள், சைவ சித்தாந்த நூற் பதிப்பு கழகம், சென்னை, முதற் பதிப்பு 1970.



**Funding**

No funding was received for conducting this study.

**Conflict of interest**

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.